# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 2 புதன்கிழமை (18.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 231




## புலிகளிடமிருந்து முழுப் பகுதிகளையும் மீட்போம் என்று ஜனாதிபதி சூளுரை!

### பிரதம செயலரின் கொலையால் சீற்றம்

கொழும்பு, ஜூலை 18

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துப் பிரதேசங்களும் அவர்களிடம் இருந்து பிடுங்கி எடுக்கப் படும்; கைப்பற்றப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபதம் எடுத்திருப்பதாக வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகள் நேற்றுத் தெரிவித்தன.

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் கொலை செய்யப்பட்டதால் சீற்றமடைந்துள்ள ஜனாதிபதி புலிகளின் கொட்டத்தை இனியும் விட்டுவைக்க முடியாது என்ற தோரணையில் கருத்துத் தெரிவித்ததாக செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

கிழக்கு மாகாணத்தை முற்றாக மீட்டு விட்டோம் என்று அரச படைத் தரப்பு உரிமை கோரினாலும் கிழக்கில் புலிகள் ஒதுக்கிவிடக் கூடிய சக்தியே அல்ல என்பதை இந்தப் படுகொலை நிரூபித்திருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுவதாகவும் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

ஆனால் - மேற்படி கிழக்கு மாகாண செயலரின் கொலைக்கும் தங்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை எனப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

"இந்தக் கொலைக்கும் எங்களுக்கும் தொடர்பு ஏதுமில்லை. யார் இதனைச் செய்திருப்பார்கள் என்பதற்கு எங்களிடம் ஊகங்களும் இல்லை. அரசியல் இலாபம் கருதி வேறு யாரும் இதைச் செய்திருக்கலாம்" - இவ்வாறு புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் கூறியிருக்கின்றார். (சி)

## புலிகளை ஜெனிவாவுக்கு கூட்டிச் செல்லாது வடக்கை நோக்கி உடன் படையெடுங்கள்!

### நாடாளுமன்றில் விமல் வீரவன்ஸ வீராவேசம்



கொழும்பு, ஜூலை 18

கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றி அங்கிருந்து விடுதலைப்புலிகளை விரட்டியடித்து அரசு வெற்றிவாகை சூடியிருக்கின்றது.

அதேபோன்று வடக்கையும் கைப்பற்றுவதற்கு உடனடியாகப் படையெடுங்கள்!

விடுதலைப்புலிகளை ஜெனிவாவுக்கு அழைத்துச் செல்வதற்கு முயற்சிப்பதைத் தவிர்த்து, படையினரை வன்னி நோக்கி நகர்த்துங்கள்!!

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் வீராவேசமாகப் பேசினார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுப் பேசிய அவர் - வன்னி நோக்கிப் படை எடுப்பதைத் தவிர்த்து, விடுதலைப் புலிகளை ஜெனிவாவுக்கு அழைத்துச் செல்ல முயற்சிக்குமானால் அதற்கு எதிராக எமது கட்சியும் மக்களும் கடுமையாகப் போராடுவோம் என்றும் விமல் வீரவன்ஸ அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கை மீட்ட வெற்றியை ஜே.வி.பி. தனியாக இன்று கொண்டாடுகிறது

கொழும்பு, ஜூலை 18

கிழக்கு மீட்கப்பட்ட வெற்றி விழாவை ஜே.வி.பி. இன்று நுகேகொடையில் கொண்டாடுகின்றது.

நுகேகொடையில் இன்று இடம்பெறும் வெற்றி விழாவில் கலந்துகொள்ளுமாறு ஜே.வி.பி. மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தமது மேற்படி விழாவையொட்டி சுவரொட்டிகளை கொழும்பு நகரிலும் ஏனைய புற நகரப் பகுதிகளிலும் ஒட்டியுள்ளது.

நாளை அரசு நடத்தும் வெற்றிவிழாவில் ஜே.வி.பி.பங்குபற்றமாட்டாது என அறிவித்துள்ளமை தெரிந்ததே. (அ-1)

### மீசாலை மேற்கில் நேற்றுக்காலை மோதல்

மீசாலை மேற்குப் பகுதியில் பங்களா வீதிக்குச் சமீபமாக நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

படையினரின் "பீல்ட் பைக்" அணியினர் அப் பகுதிக்கு வந்தபோது மோதல் வெடித்ததாக அறியப்படுகிறது. மோதலைத்தொடர்ந்து அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. சேத விவரங்கள் தெரியவரவில்லை. (அ-1-207)


உள்ளே 05 ஆம் பக்கத்தில்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள். 1


## தமிழீழ அங்குரார்ப்பண விழாவில் அதிதியாக ஜனாதிபதி மஹிந்தவை அழைப்பாராம் பிரபாகரன்

### தமது கனவை நாடாளுமன்றில் வெளிப்படுத்துகிறார் ஈழவேந்தன்

கொழும்பு, ஜூலை 18

"மிக விரைவில் மலரப்போகும் தமிழீழத்தின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தலைவர் பிரபாகரன் பிரதம அதிதியாக அழைப்பார். இந்த நிகழ்வு மிக விரைவில் நிச்சயம் நடக்கும்"

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க. ஈழவேந்தன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக பிரிட்டனுக்கு காணிகளை இங்கு கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமை குறித்து ஜே.வி.பியினர் பேசுகின்றனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் இன்று நாடாளுமன்றில் வெளியிடப்படுமாம்

கொழும்பு, ஜூலை 18

அமெரிக்காவுடன் இலங்கை செய்துகொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தின் முழுவடிவத்தை அரசு இன்று நாடாளுமன்றில் வெளிப்படுத்தவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை நாடாளுமன்றில் வெளிப்படுத்துமாறு ஜே.வி.பியினர் தொடர்ச்சியாக அரசிற்கு அழுத்தம் கொடுத்து வந்தனர். அதைத் தொடர்ந்தே இந்த ஒப்பந்தம் இன்று வெளிப்படுத்தப்படவுள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதம செயலாளருக்கு முன்னால் நின்றே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றன

திருகோணமலை, ஜூலை 18

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஹேரத் அபய வீரவை, அவருக்கு முன்னால் நின்றே ஆயுததாரி சுட்டுள்ளார்.

அவரது கொலை குறித்து நேற்று நடைபெற்ற விசாரணையில் இந்த விவரம் தெரிய வந்துள்ளது.

திருகோணமலை நீதிவான் எஸ்.ராமகமலன் மரண விசாரணைகளை நடத்தினார். (08 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை வனப்பகுதி மோதலில் படை அதிகாரிகள் இருவர் பலி!

கொழும்பு, ஜூலை 18

திருகோணமலை - கந்தளாய், சித்தாறு வனப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், படைத்தரப்புக்கும் இடையே கடும் சமர் ஒன்று மூண்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று 2.15 மணியளவில் மூண்ட இந்தச் சமரில் இராணுவ அதிகாரிகள் இருவர் பலியாகினர், பலர் காயமடைந்தனர் எனப் படைத்தரப்புத் (08 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் வழக்கு நிராகரிப்பு

### மனுதாரர்களுக்கு எதிராகவும் காட்டமாக நீதிமன்றில் கருத்து

கொழும்பு, ஜூலை 18

மூதூர் மற்றும் சம்பூர் பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டமையை ஆட்சேபித்து மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனைக்கு ஏற்க மறுத்த உயர் நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி செய்தது.

அதேநேரம், அந்த மனுவைத் தாக்கல் செய்த மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் பொறுப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து பிரதம நீதியரசின் கடும் கண்டனத்துக்கும் இலக்கானார்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் அதை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம செயலாளர் படுகொலை தொடர்பாக மாகாண சபை ஊழியர் உட்பட 8 பேர் கைது

திருகோணமலை, ஜூலை 18

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எச்.எம்.ஹேரத் அபயவீர படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, மாகாண சபையின் நான்கு ஊழியர்கள் உட்பட எட்டுத் தமிழர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து இரு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன.

சம்பவத்தின் போது பிரதம செயலாளருடன் பணியில் இருந்த நான்கு சிற்றூழியர்கள் மற்றும் ஊழியர்களின் போக்குவரத்துக்கு பஸ் சேவைகளை நடத்தும் மூன்று சாரதிகள், பிரதம செயலாளரின் வாகனச் சாரதி ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மாகாண சபையின் போக்குவரத்துச் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள பஸ்களின் சாரதிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதால் வடக்கு மாகாண சபையின் ஊழியர்கள் பணிக்குச் செல்ல முடியவில்லை.

நகரில் இருந்து எட்டு மைல் தூரத்தில்

(08 ஆம் பக்கம் பார்க்க)


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 ஆவது அகவை நிறைவில்



17.07.2007 இல் அகவை அறுபதை அடைந்த கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர்

## இ.சிவஞானசுந்தரம்

அவர்கள் ஆர்ப்பாட்டமில்லாத ஒரு பணிப்பாளர், ஒரு புன்சிரிப்புடன் சகலரையும் இணைத்து விருப்புடன் செயலாற்ற வைப்பவர். நிறைகுடம் தளம்பாது என்ற முதுமொழிக்கு இணங்க செயலாற்றி எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்கியவர். இவரது ஓய்வு காலம் சிறப்புறவும். அவரது குடும்பத்தினர் சகல சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்வுடன் வாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

**யா/ஊரெழு கணேச வித்தியாசாலையில் சேவையாற்றி ஒய்வுபெற்ற அதிபர், பதில்அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர்கள்.**

(62136)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
ROYAL Industries Colombo 12
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:-
சிவா நறுமணைப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பாலசிங்கம்

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினபுரி தனியார் துறையில் கணக்கு லிகிதராகக் கடமையாற்றிய செல்லத்துரை பாலசிங்கம் நேற்று காலமானார்.

அன்னார் ரட்ணேஸ்வரியின் (இளைப்பாறிய நூலகர், பொதுநூலகம், சுன்னாகம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் வள்ளிப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற அம்பலவாணர் (முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவர்) தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி தங்கரத்தினம், சிவஞானம், குலசிங்கம் (கனடா), குணசிங்கம் (லண்டன்), பகீரதி, ஸ்ரீஸ்கந்தராஜன், திருமதி சத்தி பாலசிங்கம் (நல்லூர்), யோகசிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நூலக வீதி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம்.
திருமதி பாலசிங்கம் (மனைவி- தங்கக்கா)

## அப்பாத்துரை அன்னலட்சுமி



சாவகச்சேரி, கற்குளி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்பாத்துரை அன்னலட்சுமி நேற்று (17.07.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை அப்பாத்துரையின் அன்பு மனைவியும் சச்சிதானந்தசிவம் காலஞ்சென்ற தியாகராசா, பரமநாதன், நவரத்தினம், சண்முகநாதன் (ஜேர்மனி), சிவஜோதி, நாகராசா (சுவிஸ்) ஆகியோரின் தாயும் இராஜேஸ்வரி, பேரின்பநாயகி, ஜெந்தி, ஜெயராணி, லலிதாம்பிகை (ஜேர்மனி), யோகரத்தினம், ரவிக்கா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் சிவஈஸ்வரன் (நோர்வே), சியமளா, பிரதாபன், சுதாகரன் (கனடா), தனிசா (சுவிஸ்), திலீபன், சாலினி, வைஷ்ணவி, சக்தியா, வஸ்திகா, சாகனா (ஜேர்மனி), சருகன் (ஜேர்மனி), சந்தீபன், அஜந்தா, நிவேதியன், அபிலாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சதுர்கனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.07.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகவேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கற்குளி வடக்கு,
சாவகச்சேரி.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# உடன் விற்பனைக்கு

192, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பெருமாள் கோயில் சந்திக்கும் பிறவுண் வீதிச்சந்திக்கும் இடையில் 2½ பரப்புக் காணியில் 60 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 81,000,00 (எண்பத்தொரு இலட்சம்) பார்வையிடும் நேரம்:- மாலை 3 - 5 மணிவரை.

தொடர்பு:-
**தேவன்**
**192, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(62141)

# பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

வழக்கு இல. மண நீக்கம்/ 477

கைலாசபிள்ளை கைலாசவரதன்
230, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
*மனுதார்*
எதிர்
கைலாசபிள்ளை கைலாசவரதன் பெண்
அந்தோனிப்பிள்ளை மகள்
ஆன்கிறேஸ் யோகராணி,
409, கண்டிவீதி, கடவத்தை,
தற்காலம் B-25,1/4, சொய்சாபுர
தொடர்மாடி, மொறட்டுவ.
*எதிர் மனுதார்*

இவ்வழக்கு 2007ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் மனுதார் மன்றில் சமுகமில்லாதிருக்கவும் மனுதாரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசா அவர்கள் மன்றில் சமுகமாகவிருந்து தனக்கு மனுதாரிடமிருந்து எவ்வித அறிவுறுத்தலும் கிடைக்காததால் தான் மனுதார் சார்பில் ஆஜராகவில்லை என்று தெரிவிக்கவும் எதிர் மனுதாரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராசாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஜெ.ஜெயரூபன் அவர்கள் ஆஜராகியிருக்கவும் எதிர் மனுதாரின் மனுக்களையும் சத்தியக் கூற்றையும் பரிசீலித்த பின்னரும் எதிர்மனுதாரின் சட்டத்தரணியின் சமர்ப்பணங்களையும் கவனத்திற்கெடுத்து எதிர்மனுதார் தனது சத்தியக் கூற்றிலும் மனுக்களிலும் கோரியுள்ள நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவர் என மன்று திருப்தியடைந்ததின் பேரில் குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 608(2)(ஆ)ன் கீழ் (ஆ) மனுதார் கடந்த 12 வருடங்களுக்கு மேலாக எதிர்மனுதாரை அமைப்பின் வழி வன்ம உறவறுத்து வாழ்ந்து வருவதன் காரணமாக 1994.06.22 இல் மனுதாருக்கும் எதிர்மனுதாருக்குமிடையில் பதிவு செய்யப்பட்ட திருமணத்தை இரத்துச்செய்து விவகாரத்து வழங்கிக் கட்டளையிட்டும் (இ)(1) மேலும் குடியியல் நடவடிக்கை முறைக்கோவையின் பிரிவு 614 (1) இன் கீழ் வழக்குக் காலப் பிரிமனைப் பணமாக மாதமொன்றுக்கு ரூபா 20,000.00 வீதம் 2005.01.11இல் இருந்து முற்றான கட்டளை பதியும் வரை மனுதார் எதிர்மனுதாருக்குக் கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டும் மேலும் (11) மேற்குறிப்பிட்ட கோவையின் பிரிவு 614(3)இன் கீழ் வழக்கைக் கொண்டுநடத்துவதற்குரிய செலவாக ரூபா 30,000.00 மனுதார் எதிர் மனுதாருக்குக் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டும் மேலும் (111) கொழும்பிலிருந்து யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு வந்துபோகும் போக்குவரத்துச் செலவாக ஒவ்வொரு வழக்குத் தவணைக்கும் ரூபா 10,000.00 வீதம் மனுதார் எதிர்மனுதாருக்குக் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டும் மேலும் (ஈ) நிரந்தர பிரிமனைப்பணமாக ரூபா ஐம்பது இலட்சம் (ரூபா 5,000,000.00) மனுதார் எதிர் மனுதாருக்குக் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டும் (உ) ஏற்கனவே நீதிமன்றினால் கட்டளையிடப்பட்ட செலவு ரூபா 3,000.00 உடன் எதிர் மனுதார் சமர்ப்பிக்கும் செலவுப் பட்டியலில் பதிவாளரால் வரியீடு செய்து வரும் தொகையை மனுதார் எதிர்மனுதாருக்குக் கொடுக்க வேண்டு மென்று கட்டளையிட்டும் இத்தால் பின்னுறுதித்தீர்வை வழங்கப்படுகிறது.

மேற்சொல்லிய பின்னுறுதித் தீர்வைக்கு எதிராக மனுதாருக்கு ஆட்சேபனை ஏதுமிருப்பின் மனுதார் 2007 ஆம் ஆண்டு ஆனி (06) மாதம் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு இம் மன்றில் தோன்றித் தனது ஆட்சேபனையைத் தெரிவிக்க வேண்டுமென்றும் அவ்வாறு செய்யத்தவறின் இப்பின்னுறுதித்தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்றும் இத்தால் மேலும் கட்டளையிடப்படுகிறது.

*2007 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 01 ஆம் திகதி*

*வரைவு*
லிங்கா துரைராஜா,
எதிர் மனுதாரின் சட்டத்தரணி.

*ஒப்பம்*
மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.

மேற்சொல்லிய பின்னுறுதித்தீர்வைக்கு எதிராக மனுதாருக்கு ஆட்சேபனை ஏதுமிருப்பின் மனுதார் 2007 ஆம் ஆண்டு ஆவணி (08) மாதம் 1 ஆம் திகதி மு.ப. 9மணிக்கு இம் மன்றில் தோன்றித் தனது ஆட்சேபனையைத் தெரிவிக்க வேண்டுமென்றும் அவ்வாறு செய்யத் தவறின் இப்பின்னுறுதித்தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமென்றும் இத்தால் மேலும் கட்டளையிடப்படுகிறது.

*நீதிமன்றின் கட்டளைப்படி*
து.சிறீமோகன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

இ.த.விக்னராஜா,
மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.

(62744)

# மரண அறிவித்தல்கள்

## கல்கி இலங்கைநாதன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கல்கி இலங்கைநாதன் (16.07.2007) அகால மரணமானார்.

அன்னார் இலங்கைநாதன் - காலஞ்சென்ற நாகேஸ்வரி தம்பதியரின் மகளும் கிருஸ்ணாநிதி (பிரான்ஸ்), கோகிலவர்த்தனி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் இலங்கேஸ்வரன், லோகநாதன் ஆகியோரின் மைத்துனியும் பதுமிலா, பவிதரன், லக்ஷனா, சங்கீர்த்தன், சகீர்தன் ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2007) முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக் கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பால்சங்க ஒழுங்கை,**
**இணுவில் மேற்கு.** (62139)
முருகேசு இலங்கைநாதன் (தந்தை).

## சுந்தரமூர்த்தி குணசீலன்



பாடசாலை வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாவும் கொண்ட சுந்தரமூர்த்தி குணசீலன் 16.07.2007 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சுந்தரமூர்த்தி-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சத்துருசிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யாழினியின் அன்புக் கணவரும் டிக்ஷன், டிலக்ஷினி, டிலானி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாடசாலை வீதி.
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (62149)
தர்மகுலசிங்கம் (பெரியராசா),
தனபாலசிங்கம் (பொன்ராசா).

## தவறிவிட்டது

உயரப்புலம், ஆனைக்கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த தோமஸ் இராயப்பு என்பவரது தேசிய அடையாள அட்டை (753243968v) 13.07.2007 அன்று யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஜீவ், நவாலி றோட், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (62138)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :18.07.2007 - 02.08.2007 நண்பகல் 12 மணிவரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :03.08.2007 - நண்பகல் 12 மணிவரை.
கேள்வி திறந்துபார்க்கும் திகதி : 03.08.2007 - பிற்பகல் ஒரு மணிக்கு.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வரி உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 01. உடுவில் பாடசாலை வீதி திருத்தம் | 16500.00 | 575.00 | M9 |
| 02. சுன்னாகம் பேருந்து நிலைய பகுதி திருத்தம் | 19500.00 | 575.00 | M9 |
| 03. மருதனார்மடம் கொட்டகை அமைத்தல் பகுதி 1 | 6000.00 | 575.00 | M9 |
| 04. மருதனார்மடம் கொட்டகை அமைத்தல் பகுதி 2 | 8000.00 | 575.00 | M9 |
| 05. மருதனார்மடம் கொட்டகை அமைத்தல் பகுதி 3 | 20000.00 | 575.00 | M9 |
| 06. பூவோடை இந்து மயான மடம் அமைத்தல் | 9000.00 | 575.00 | M9 |
| 07. கொத்தியாலடி மயான எரிக்கும் கொட்டகை அமைத்தல் | 7000.00 | 575.00 | .... |
| 08. மீன்சந்தைக் கழிவுகுழி அமைத்தல் | 6500.00 | 575.00 | M9 |

குறிப்பு: இலக்கம் 1, 2 வேலைகளுக்குரிய தார் ஒப்பந்தகாரரால் வழங்கிச் செய்யப்படல் வேண்டும். (பிரதேசசபையால் தார் வழங்கப்படமாட்டாது)

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்திற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதியை "*செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்*" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்*" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ச.[illegible]
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம், 16.07.2007 (சி/52956)

ADMISSIONS OPEN for September - 2007



உங்கள் நிச்சயமான எதிர்காலத்தை இன்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள்
BTEC HND
World Class Qualifications
Delivered Locally...... Recognised Globally
Edexcel 'A' Rated Centre
IIS CITY CAMPUS
# 200,Sivan Pannai Road, Jaffna
TP No.: 021 222 8060

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
08.10.1939

உதிர்வு
01.08.2003

**திதி: 18.07.2007**

ஆண்டுகள் நான்கு சென்றது ஐயா
ஆறவில்லை எம்துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவை அனைத்தும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?



## அமரர் சின்னத்தம்பி வழிவேலுப்பிள்ளை

(பங்குதாரர், நியூ சோபிதா நகைமாடம், யாழ்ப்பாணம்)

"திருவேரகம்",
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

நியூ சோபிதா நகைமாடம்,
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.

(62742)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

வடக்கு மாகாண சேவையில் உள்ள அலுவலகப் பணியாளர்கள் மூலம் சாரதி பதவியில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் தெ.து. விஜயலட்சுமி சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

(203- 207)

## மாவைக் கந்தன் காம்யோற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை18

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய சர்வசித்து வருட காம்யோற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.

25 நாள்களில் விசேட திருவிழாக்களின் விவரம் வருமாறு:

எதிர்வரும் 23ஆம் திகதி ஷண்முகப் பெருமானின் திருநடனம், 30ஆம் திகதி ஷண்முகார்ச்சனை என்பன இடம்பெறும்.

அடுத்தமாதம் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று கண்டகி தீர்த்தமும் 14ஆம் திகதி க்ஷத்திரபால ஆராதனையும் இடம்பெறும்.

திருவிழாக்கள் யாவும் தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணி வரை நடைபெறும். அடியார்களின்வசதி கருதி இலங்கை போக்குவரத்துச் சபை வழமைபோல் தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து மாவிட்டபுரம் ஆலயம் வரை பஸ்சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் பரிசுத்தமான அர்ச்சனை, ஆராதனைப் பொருள்கள், மாவிளக்கேற்றுவதற்கான செந்திணை, தேன், சர்க்கரை, பசுநெய், நூற்திரி ஆகியவற்றையும் மலிவு விலையில் பெறுவதற்கான வசதிகள் ஆலய தெற்கு வீதியிலுள்ள விற்பனை நிலையங்களில் செய்யப்பட்டுள்ளன எனவும் ஆதீனகர்த்தா பிரதம குரு மஹா ராஜ ஸ்ரீ சுது. சண்முகநாதக் குருக்கள் தெரிவித்தார்.

(203)

## விடிவெள்ளிக் கொத்தணியின் ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை18

மகளிர் சிறுவர் மேம்பாட்டுத் திட்டத்தின், விடிவெள்ளி கொத்தணியின் 3ஆம் ஆண்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மட்டுவில் லூர்த்து மாதா தேவாலயத்தில் திருமதி இராஜகோபால் சிவனேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்திய கலாநிதி திருமதி லியோன் புஸ்பராணி கலந்துகொள்வார்.

(203-157)

## தனியார் பாரவூர்திகளை பதிவுசெய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்து, இறங்கு துறையிலிருந்து பொருள்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடாமல் இருக்கும் சகல பாரவூர்திகளையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக சேவையில் ஈடுபடுவதற்கான பதிவுகளை சங்கத்தில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறித்த திகதிக்கு பின்னர் பதிவு செய்யப்படாமலுள்ள பாரவூர்திகள் அணிப் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்று சங்கத்தின் தலைவர் இ. அரிகரன் அறிவித்துள்ளார். (202)

## பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் 108ஆவது பிறந்ததின நிகழ்வு

நல்லூர், ஜூலை 18

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 108ஆவது பிறந்ததின விழாவும் திருவருட்பயன் உரை நூல் வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

பண்டிதை பொன்பாக்கியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருவருட்பயன் உரை நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்தியதுடன் நூலையும் வெளியிட்டு வைத்தார்.

திருவருட்பயன் உரை நூலின் முதல் பிரதியை ஓய்வுபெற்ற அதிபர் க. பேரம்பலம், பேராசிரியர் சிவலிங்கராஜாவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

நூல் அறிமுகவுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு நிகழ்த்தினார்.

வேலணையூர் பண்டிதை தம்பு வேதநாயகி அம்மையாரின் நினைவுரையை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலய அதிபர் பொ. அருணகிரிநாதன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் செ. சோதிப்பெருமாள், ஓய்வு பெற்ற ஆசிரியர் அ. பஞ்சாட்சரம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

முன்னதாக சாந்தையார்மடம் கற்பகவிநாயகர் ஆலயத்தில் வழிபாடும் அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கை நாவலர் மகா வித்தியாலய அதிபர் சு. சிவபாலசுந்தரம் ஏற்றி வைக்க பண்டிதமணியின் உருவப்படத்திற்கு சைவப் புலவர் இ. செல்லத்துரை மலர் மாலை அணிவித்தார்.

(203-111)






பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 108ஆவது பிறந்ததினம் மற்றும் திருவருட்பயன் உரைநூல் வெளியீடு நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: லக்ஷ்மன்)

## விதை நெல், நிலக்கடலை, எள்ளு, சோளம், கௌபி பயிரிடும் விவசாயிகள் கௌரவிக்கப்பட உள்ளனர்

### 2007ஆம் ஆண்டுக்கான போட்டியில்

யாழ்ப்பாணம்,ஜூலை18

யாழ். மாவட்டத்தில் 2007ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கென விவசாயிக்ளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக 34 விவசாயிகளும் மாவட்ட மட்டத்தில் 6 விவசாயிகளும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் விண்ணப்ப படிவங்களைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து அவர்களிடம் வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக விண்ணப்பிக்கும் விவசாயிகள் சிந்த சுய விதை நெல் உற்பத்தியாளராக, 2007 சிறு போகத்தில் நிலக்கடலைச் செய்கையில் ஹெக்ரயர் ஒன்றுக்கு 2.5 மெற்றிக் தொன்னுக்கு மேல் விளைவுபெற்றவராக, 2006/07 காலபோகத்தில் வெற்றிகரமான குரக்கன் செய்கையாளராக -

'உமா' எள்ளுச் செய்கையில் உச்ச விளைச்சல் பெற்றவராக, 2006/ 2007 கால போகத்தில் உணவுப் பாதுகாப்பிற்காக சோளப்பயிர்ச் செய்கை குறைந்தது 250 சதுர மீற்றர் நிலப் பரப்பில் வெற்றிகரமாக மேற்கொண்டவராக, கௌபி சுயவிதை உற்பத்தியை வெற்றிகரமாக மேற்கொண்டு தூயவிதை விநியோகம் செய்பவராக, சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளராக இருக்க முடியும்.

மாவட்ட மட்டத்தில் விண்ணப்பிக்கும் விவசாயிகள் நுண்நீர்ப்பாசனம் மூலம் உயர் விளைச்சலையும் செறிவான பயிற்சி செய்கை மேற்கொள்பவராக, சிறந்த பெறுமான அதிகரிப்பை வர்த்தக ரீதியில் மேற்கொள்ளும் சிறந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினராக, திட்டமிட்ட மாதிரி நகர்ப்புற விவசாயச் செய்கையாளராக -

விவசாய விரிவாக்கத்திற்கு உறுதுணையாகச் செயற்படும் சிறந்த சம்மேளனத்தினராக, சிறப்பான கத்தரிப்பு பராமரிப்பு மூலம் உயர்விளைவு பெறும் மாமரச் செய்கையாளராக, 'நியாப்' மையக் கிராமங்களின் பயனாளிகளுக்கு அதிகூடிய விவசாய விரிவாக்க சேவையைப் பெற்றுக் கொடுக்கும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினராக இருக்க முடியும் -என்று பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

(203)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

நல்லூர்,ஜூலை18

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திலும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை நடத்தவுள்ளது.

சைவபரிபாலன சபையின் செயலாளர் இரா. செல்வவடிவேல் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி சைவபரிபாலன சபை இனிவரும் காலங்களில் குருபூசை தினங்களை பாடசாலைகளில் நடத்தத் தீர்மானித்துள்ளது. (203-111)

## சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு கொடிதினம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வெள்ளிவிழாவையொட்டிய கொடித் தினம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் முதல் கொடியை யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேஸூக்கு சமாசத் தலைவர் அணிவித்து கொடித்தின நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் ரீதியாகவும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் கொடிகளை விநியோகம் செய்தார்கள்.

உடுவில் பிரதேச சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் க. இரகுநாதன், உடுவில் பிரதேச செயலாளர் செல்வி. தி. மஞ்சுளாதேவிக்கு முதல் கொடியை வழங்கி கொடித்தினத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலைகள், வங்கிகள் எனப் பல இடங்களிலும் கொடிகள் விநியோகிக்கப்பட்டன.

(203- 68)

## முகாமை உதவியாளர் வகுப்பு ஒன்றில் உள்ளோரை பதவி உயர்த்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு மாகாண பொதுச் சேவையில் மாகாண முகாமை உதவியாளர் வகுப்பு I இல் உள்ள உத்தியோகத்தர்கள் திறமை அடிப்படையில் அதி உயர் வகுப்புக்கு பதவி உயர்வு வழங்க மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பதவியுயர்வு வழங்குவதற்கு தகைமையுடைய உத்தியோகத்தரின் விவரங்கள் அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, வகுப்பு I இற்கு நியமனம் பெற்றபின்னர் ஆற்றிய பதவி விவரங்களுடன் அந்த உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவையையும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப் பகுதியில் (வகுப்பு I இற்கு நியமிக்கப்பட்ட பின்பு) வகித்த பதவிக்கு புள்ளிகள் வழங்குவதற்காக விவரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண முகாமை உதவியாளர் சேவையில் மாகாண பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, சிறாப்பர் சேவை, பண்டகசாலை காப்பாளர் சேவை ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஒன்றிணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203 - 207)

## ஹென்றியரசர் நூற்றாண்டையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் விவரம் வருமாறு:

**உதைபந்தாட்டம்**

புனித ஹென்றியரசர் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**வினாடி வினா- மாவட்டம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**வினாடி வினா- எழுத்துப் பரீட்சை**

ஆர்.கஜானன் (புனித பரியோவான் கல்லூரி), எஸ்.திசாபன் (நெல்லியடி ம.ம. வித்தி), கே.சரண்ஜா (நெல்லியடி ம.ம. வித்தி).

**ஓவியம்- வலயமட்டம்**

யோ.சிவேந்தர் (இணுவில் மத்திய கல்லூரி), சி.விமலதாஸ் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிய பாடசாலை), ஜெ.நதீஸ் (ஸ்கந்தவரோதயக்கல்லூரி).

**கட்டுரை- வலயமட்டம்**

கு.அனுஷா (இணுவில் இந்துக் கல்லூரி), ர.பிரிய (மானிப்பாய் இந்துக் கல்லூரி), றெ.ஆன் [illegible] (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

## கிளைமோரில் பலியான அதிபருக்கு அனுதாபம்

### பாதுகாப்பு தலைமையகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் சிக்கி பலியான சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபருக்கு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை நெல்லண்டைப் பகுதியில் எல்.ரி.ரி. இயக்கத்தினால் இராணுவ வாகனத்தை இலக்குவைத்து கிளைமோர் குண்டு ஒன்று வெடிக்கவைக்கப்பட்டது. அதன்போது அவ்வாகனத்தில் பயணம் செய்த இராணுவத்தினர் ஒருவர் சிறுகாயங்களுக்குள்ளானார்.

இத்தாக்குதலில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகளின் விருப்பத்திற்குரிய அன்பான ஆசிரியத் தந்தையான துன்னாலை சிவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் மணியம் கணபதிப்பிள்ளையும் சிக்குண்டு மரணமாகியுள்ளார். கொடூரத் தாக்குதலில் மரணித்த சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் அதிபருக் குப் பாதுகாப்புப் படையினரின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- என்றுள்ளது.

(202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Jaffna Head office*
No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

*Branch office*
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

## Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..

Course Fee :2000/=

## Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.

Course Fee :3500/=

## Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.

Course Fee :3000/=

## Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX

Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 23/07/2007- 09.00


## தவறிவிட்டது

யாழ்.வைத்தியசாலைக்கு அருகில் கடந்த புதன்கிழமை கதிரேசு கிருஷ்ண பிள்ளை என்பவருடையதே.அ.அட்டை மற்றும் கிருஷ்ண பிள்ளை சிவலோக நாயகி என்பவருடைய தேசிய மற்றும் விசேட அடையாள அட்டைகள் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் உள்ள கொடிகாமம் விலாசத்திற்கு தந்துதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(62133)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ்/இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனுமாகிய செல்வன் சிதம்பரநாதன் சபேசன் இன்று [18.07.2007] University of Sheffield, London இல் நிகழும் பட்டமளிப்பு விழாவில் "Electronic Engineering (Communication), Degree - B Eng (Hons), With 1st Class பட்டம் பெறுவதையிட்டு அவரை வாழ்த்துவதுடன் மேலும் பல சிறப்புகளை உயர்கல்வியில் பெற்றிட எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செல்வன் சிதம்பரநாதன் சபேசன்**

(62112)

வாழ்த்துவோர்:-
அம்மா, அக்கா, பெரியம்மா, பெரியப்பா, அண்ணா, தங்கை, தம்பி, லண்டனைச் சேர்ந்த சித்தி, சித்தப்பா, அக்காமார், தங்கை.

ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை.



அனலைதீவு அரிஹரபுத்திர
ஐயனார் ஆலய
**மஹோற்சவப் பெருவிழா**
*20-07-2007*

20-07-2007 வெள்ளிக்கிழமை 12.15 மணிக்கு
**கொடியேற்றம்**
27-07-2007 வெள்ளிக்கிழமை மாலை
**சப்பரத் திருவிழா**
28-07-2007 சனிக்கிழமை காலை 10 மணிக்கு
**தேர்த்திருவிழா**
29-07-2007 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு
**தீர்த்தோற்சவம்**

விசேட படகுச் சேவையாக காலை 9.30 மணிக்கு கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து அனலைதீவிற்கும் பிற்பகல் 1.30 மணிக்கு அனலைதீவில் இருந்து கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கும் பத்து நாள்களும் சேவைகள் இடம்பெறும்.

பத்து நாள்களும் அனலைதீவு ஐயனார் ஆலய அன்னதான சபையினரால் அன்னதானம் வழங்கப்படும்.

"சாமியே சரணம் ஐயப்பா"

**ஆலய பரிபாலன சபையினர்,**
**ஐயனார் ஆலயம்,**
**அனலைதீவு.**

(62110)

## இறைச்சிக்கோழி விற்பனை

*புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.* **நல்லூர் பாம் சென்ரர்** *19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.*

(62125)

## உடன் தேவை

'ஓப்செட்' அச்சு இயந்திர பைண்டர் மற்றும் உதவியாளர் உடன் தேவை. (19.07.2007) நாளை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

**எஞானம்ஸ் பிரின்டர்ஸ்,**
**237, கந்தர்மடச்சந்தி, யாழ்ப்பாணம்.**
T.P. : 0777164613

(62121)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகான மணமகளுக்கும் [வயது - 42], இங்கிலாந்து உயர் கல்வியுடன் அங்கு உயர் பதவி வகிக்கும் தம்பியாருக்கும் [வயது 39] தகுந்த மணமக்களை எதிர்பார்க்கின்றார்கள். மாற்றுச் சம்பந்தத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். சிறந்த சீதனம் கொடுக்கப்படும். (62719)

**விளம்பர இல. 2992 மே/பா உதயன்**

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டு இறங்குதுறையிலிருந்து பொருள்களை ஏற்றியிறக்கும் சேவையில் ஈடுபடாமல் இருக்கும் பாரவூர்திகளை எதிர்வரும் 22.07.2007ஆம் திகதிக்கு முன்னதாக சங்கத்தில் சேவையில் ஈடுபடுவதற்கு பதிவுசெய்யுமாறு வேண்டுவதோடு குறித்த திகதிக்குப் பின்னர் சேவையில் ஈடுபடுவதற்கு பதிவு செய்யப்படாமலுள்ள பாரவூர்திகள் அனைத்தும் அணிப் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(சி-52955)

**இயக்குநர் சபை**
**(யா.மா.த.பா.உ.கூ.ச.)**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால
தற்காலிகக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2007

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிகக் கடைகள் அமைப்பதற்கான நிலையங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எதிர்வரும் 31.07.2007 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக 10000/- ரூபாவும் ஏனைய கடைகளுக்கு 2000/- ரூபாவும் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமாக 300/- ரூபாவும் (வற்வரி நீங்கலாக) கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பப் படிவத்தினை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 31.07.2007ஆம் திகதி காலை 10.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் யாவையும் இவ்வலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் உரிய நேரத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் எதிர்வரும் 31.07.2007ஆம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்திபெற்றவர் கேள்வித்தொகையை முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

*குறிப்பு:*
சபையினால் வழங்கப்பட்ட கடைகள் தவிர வேறு கடைகள் கோயில் சுற்றாடலில் திருவிழாக் காலத்தில் திறந்து நடத்துவதற்கும், விளம்பரப் பதாதைகள் கட்டுவதற்கும், விளம்பரம் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மு.செ.சரவணபவ**
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*மாநகராட்சி மன்றம்,*
*யாழ்ப்பாணம்*
16.07.2007

(சி-52954)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
**திருமதி மோகன் ரூபா**
அவர்களின் அன்புத் தாய்
**பாக்கியலட்சுமி சிவராஜா**

அவர்கள் 15.07.2007 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். இவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
நல்லூர் பிரதேச செயலகம்.

(62115)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு*
30 - 10 - 1953



*உதிர்வு*
18 - 07 - 2000

**அமரர் கந்தசாமி தர்மேசன்**
(திட்டமிடல் உதவியாளர் - வலிகாமம் கல்வி வலயம், சாரண உதவி ஆணையாளர் - காங்கேசன்துறை.)

*எமது ஏழு வருடக் கண்ணீர் பெருகி*
*ஏழு சமுத்திரங்களாக மாறியுள்ளது*
*அந்தச் சமுத்திரத்தை வற்ற வைப்பதற்கு*
*ஏழேழு ஜென்மமும் போதாதையா*

*"தரன் இல்லம்",*
*தேவாலய வீதி,*
*மூளாய், சுழிபுரம்.*

**அன்பான மனைவி,**
**முத்தான முத்தரன்கள்.**

(6213..)


# COMPUTER EXPRESS
## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 — 80% off

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~7,000~~ 1,400 | Honours Diploma in Computer Science, 5 Months, ~~9,000~~ 1,800 | Diploma in Web page Designing, 4 Months, ~~7,000~~ 1,400 |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~7,000~~ 1,400 | Diploma in Desktop Publishing, 4 Months, ~~6,000~~ 1,200 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~6,000~~ 1,200 |
| Diploma in Auto CAD, 3 Months, ~~6,000~~ 1,200 | Diploma in Microsoft Office, 3 Months, 750 | Accounting Package, 3 Months, ~~7,000~~ 1,400 |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5000~~ | 2,500 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 20/07/2007
Batch II : 22/07/2007
Batch III : 25/07/2007
Batch IV : 29/07/2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை**
வினாத்தாள் 1
ஆக்கம்: **திரு.வே.அன்பழகன்,** யாழ்ப்பாணம்.
45 நிமிடங்கள்

* தரப்பட்ட ஐந்து உருவங்களிலும் ஓர் உரு வேறுபட்டது. அதன்கீழ்க் கோடிடுக.

01.




02.




03. கீழ உருவில் தரப்பட்டுள்ள பிராணியை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக.




(1) வீட்டில் வசிக்கும், தாவர உணவுகளை மட்டும் உண்ணும்.
(2) நான்கு கால்களை உடையது. இரண்டு கொம்புகளை உடையது.
(3) வீட்டில் வசிக்கும். வாலை ஆட்டும்.

04. உருவில் காட்டப்பட்டுள்ள பிராணியை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக.



(1) மனிதர்களிடம் அன்புடையது. தாவரங்களை உண்ணும். வீட்டில் வசிக்கும்.
(2) நான்கு கால்களை உடைய பிராணி. நீரில் வாழும். வேட்டையாடும்.
(3) புர்ர் புர்ர் சத்தமிடும். உடலோடு உரசிச் செல்லும். அருகில் வந்து உறங்கும்.

05. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருள்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) C, D / A, B (2) B, C / A, D (3) B, D / A, C

06. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக்கூட்டங்களைச்சரியாகக் காட்டும்விடையைத் தெரிவுசெய்க.

(1) A, D / C, E / B, F (2) A, E / B, C / D, F (3) C, F / B, D / A, E

07. ஒருநிரையில் ஆண் பிள்ளைகள் வரிசையாக நின்றனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும் போது பாபு 17 ஆவதாக நின்றிருந்தான். மறு பக்கத்திலிருந்து கணக்கெடுக்கும்போது, அவன் 8 ஆவதாக நின்றிருந்தான். எனவே, அந்நிரையில் எத்தனை ஆண் பிள்ளைகள் நின்றிருந்தனர்.
(1) 24 (2) 25 (3) 26

08. 24 மீற்றர் கம்பு ஒன்று இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு, அவற்றுள் ஒரு பகுதி இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டது. அவற்றுள் ஒரு துண்டின் நீளம் எத்தனை மீற்றர்.
(1) 3m (2) 4m (3) 6m

* அருகேயுள்ள எழுத்துக்கள் எண்கள் காணப்படும் அடைப்பை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிந்து கீறிடுக.


| | | | |
|---|---|---|---|
| B | 2 | க | 8 |
| 7 | 6 | த | B |
| ச | 2 | B | 6 |
| 7 | க | ⊙ | ச |

09. இங்கு அதிகம் காணப்படுவது எது?
(1) க (2) 6 (3) B


10. குறைவாகக் காணப்படும் தமிழ் எழுத்து எது?
(1) த (2) க (3) ச

* வெற்றிடத்திற்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.

11.




12.





* பின்வரும் வினாக்களிற்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

13. பெண் என்றாவதொரு நாள் ...............
(1) தாயாவாள் (2) மணம் முடிப்பாள் (3) இறப்பாள்

14. கதைகளில் எப்பொழுதும் ........ இருக்கும்
(1) சோகம் (2) சம்பவம் (3) விறுவிறுப்பு

* கொடுக்கப்பட்ட விளக்கத்தை அவதானித்து வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




15. ▢ இற்குள் வரவேண்டிய எண்
(1) 4 (2) 3 (3) 2


16. ◯ இற்குள் வரவேண்டிய எண்
(1) 3 (2) 4 (3) 2

* பின்வரும் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்று அடைப்புக்குள் பொருத்தமான விடையை அருகிலுள்ள மூன்று விடைகளிலிருந்து தெரிந்து கீறிடுக.

17. 62491 → 1942 → 249 → ▢ (1) 942 (2) 49 (3) 94

18. 345 → 534 → 453 → ▢ (1) 345 (2) 354 (3) 435

*




உருவை அவதானித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகளைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

19. A என்ற எழுத்து எந்த உருவுக்கு மாத்திரம் உரியது?
(1) வட்டத்திற்கு (2) சதுரத்திற்கு (3) முக்கோணிக்கு (.............)

20. D என்ற எழுத்துக்கு உரிய உருக்கள் எவை?
(1) முக்கோணியும் சதுரமும் (2) வட்டமும் சதுரமும் (3) வட்டமும் முக்கோணியும் (...........)

* கீழ் உள்ள அட்டவணையைப் பயன்படுத்திச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | S | S | 3 | T | 4 | 3 | P | L | 8 |
| 1 | T | T | 2 | P | P | 9 | S | 5 | 5 | 8 |
| S | 3 | P | 8 | S | L | S | 4 | T | 9 | T |

21. அதிக அளவில் இடம்பெற்ற எழுத்து எது?
(1) S (2) T (3) P (4) L

22. S அதிகளவில் இடம்பெற்றுள்ள நிரை எது?
(1) முதலாவது நிரை (2) 2ஆவது நிரை (3) 3 ஆவது நிரை

* சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

23. விமலை விட அனில் 30 ரூபா குறைவாக வைத்திருந்தான். அவர்கள் இருவரிடம் மொத்தமாக 90 ரூபா இருந்தால் அனிலிடம் எத்தனை ரூபா இருக்கலாம்?
(1) 5 ரூபா (2) 30 ரூபா 3) 120 ரூபா (4) 60 ரூபா


24. ஒரு வட்டப் பாதையின் நடுவில் நின்று மேற்குத் திசையைப் பார்க்கும் ஒருவன் இடஞ்சுழியாக அரைவட்டம் திரும்பிப் பார்க்கின்றான். தற்போது அவன் நோக்கும் திசை யாது?
(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு

* ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் இடதுபக்கப் பகுதி, வலது பக்கத்தில் உள்ள பகுதிக்குச் சமனாக இருக்குமெனில் (✓)எனவும் இல்லை எனின் (×)எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.


25. A S S L P K R T Z S - A S S L P R T S S (.............)

26. க ப K R G P V T J K - க ம K R P V I ம த (.............)

* பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து கீறிடுக.

27. 


இவ்வுருவில் எழுத்து A இனால் காட்டப்படும் பகுதி, 20 நிமிடங்களைக் குறிக்கிறது எனின் 1 மணித்தியாலயத்தைக் காட்டும் உரு எது?




* கீழ் உள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள கூற்றுக்களை நன்கு விவரிக்கின்ற விடையைத் தெரிந்து கீறிடுக.

28. ஆனந்தனைப் பாராட்டிப் பேசாதவர்கள் யாருமில்லை.
(1) ஆனந்தன் யாரையும் பாராட்டிப் பேசவில்லை
(2) ஆனந்தனை யாரும் பாராட்டிப் பேசவில்லை
(3) ஆனந்தனை எல்லோரும் பாராட்டிப் பேசினர்

29. இடைவிடாது முயல்பவர்கள் எக்காரியத்திலும் வெற்றி பெறுவர்.
(1) தொடர்ந்து முயற்சி செய்வோர் எந்தக் காரியத்திலும் தோல்வி அடைவதில்லை.
(2) வெற்றி பெற்றவர்களே தமது காரியங்களை முடிப்பதற்கு இடைவிடாது முயற்சி செய்வர்
(3) வெற்றி இல்லாத எக்காரியத்திற்கும் முயற்சி அவசியம்

* முதல் இரண்டு படத்திற்கும் உள்ள தொடர்பை அவதானித்து அடுத்த படத்துடன் மிக நெருங்கிய தொடர்பு உடைய உருவின் கீழ்க் கோடிடுக.

30.





31.





* கீழ்வரும் உருக்களில் இரண்டு ஒத்ததன்மை உடையவை. அந்த உருக்களைக் காட்டும் விடையின் கீழ்க் கீறிடுக.

32.




33.




* சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

34. ஸ்ரீதரன் கரிகரனைவிட உயரமானவன். உலோகநாதன் இராமனை விட உயரங் குறைந்தவன். ஸ்ரீதரன் உலோகநாதனைவிட உயரங் குறைந்தவன். இவர்களின் உயரங்கூடியவன் யார்?
(1) ஸ்ரீதரன் (2) கரிகரன் (3) உலோகநாதன் (4) இராமன்

35. 450, 112, 927, 515, 702 இவற்றை மிகப் பெரிய எண்ணிலிருந்து தொடங்கி இறங்கு வரிசையில் எழுதினால் அத்தொடரில் நடுவில் வரும் எண்ணின் நடு இலக்கத்தை எழுதுக.
(1) 5 (2) 1 (3) 2 (4) 0

* இல. 36-37 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

36. குமரன் படிப்பில் கெட்டிக்காரச் சிறுவன். எனினும், அடிக்கடி பாடசாலைக்கு வரமாட்டான். அவன் பாடசாலைக்கு வருவதை ஊக்கப்படுத்த ஆசிரியை விரும்பினார். ஆசிரியை அதற்கு எடுத்த நடவடிக்கையின் முதலாவது நடவடிக்கை எதுவாக இருக்கும்?
(1) குமரன் பாடசாலைக்கு வரும்போது தண்டனை வழங்குவது
(2) குமரனைப் பாடசாலைக்கு அழைத்து அவனது குடும்ப பின்னணியையும் பாடசாலைக்கு வராத காரணத்தையும் அறிதல்.
(3) குமரனது பெற்றோரை அழைத்து அவனை எப்படியாவது ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பிவைக்குமாறு பணித்தல்.

37. ஓட்டப்போட்டி ஒன்றில் கலந்துகொண்ட அமல் கடைசிக்கு முதலாகவும் நிமல் கடைசியாகவும் விமல் முதலாவதாகவும் வந்திருந்தனர். கமல் என்பவன் விமலினை அடுத்து வந்தான் இவர்களில் முதலாம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் முறையே,
(1) விமல், கமல், அமல் (2) விமல், அமல், கமல்
(3) கமல், விமல், அமல்

* பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

38. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து **பலத்தில்** உண்டு. **குலத்தில்** இல்லை
இரண்டாம் எழுத்து **மணத்தில்** உண்டு **மனத்தில்** இல்லை
மூன்றாம் எழுத்து **கொம்பில்** உண்டு **கொப்பில்** இல்லை.
...........................................

* பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சம்பவங்களைச் சரியாக ஒழுங்கு வரிசைப்படுத்தினால் நடுவில் வரும் சம்பவத்தைக் காட்டும் விடையைத் தெரிந்து கீறிடுக.

39. A. பூக்களைக் கண்டு அவற்றைச் சுற்றி வட்டமிட்டன.
B. அவை ஒன்று சேர்ந்து தேன்வதையை உருவாக்கின.
C. பூக்களுக்குத் தீங்கு செய்யாது தேனைக் குடித்தன.
D. அவை வதையில் சேர்த்த தேன் ஓர் அருமருந்தாகும்.
E. தேனீக்கள் பூக்கள் இருக்கும் இடங்களை நோக்கிப் பறந்தன.
(1) C (2) B (3) A

40. A. கதிர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக மிகவும் ஆர்வத்தோடு கல்வி கற்றான்.
B. அதனால் அவனுக்கு, நகரத்தில் உள்ள ஒரு பெரிய பாடசாலையில் சேர்ந்து படிக்க அனுமதி கிடைத்தது.
C. அவன் அப்பரீட்சையில் சித்தியடைந்தான்.
D. மிகுந்த திறமையோடு பரீட்சை எழுதினான்.
E. பெரிய பாடசாலை ஒன்றில் சேர்ந்து கற்கவேண்டும் என்ற அவனது கனவு நனவாகியது
(1) B (2) C (3) A

**கடந்த 11.07.2007 வெளியான வினாத்தாளிற்கான விடைகள்**
**பகுதி - II**

01.1. காற்றுக்கு/காற்றாய்ப் பறப்பதற்கு 2. மான்போல 3. வேகமாக செல்லல் 4. உதவி செய்தல் 5. மூச்சுப் பேச்சு 6. விதவை/கைம்பெண் 7. வைத்தியம் 8. அலங்கோலம் 9. கிடந்தாள்/ வந்தாள் / திகைத்தாள் 10. மோதியது *(10 புள்ளிகள்)*
02.1.(1) உயர்திணை (2) பலர்பால் (3) பன்மை (4) படர்க்கை (5) நிகழ்காலம் 2. (1) பேர்த்தி (2) உழத்தி 3. பால் 4. கடற்கரை 5.(1) கலை (2) களிறு 6.(1) அலப்பும் (2) இரையும் 7. வேட்பாளர் 8. நண்பனே! என்ன செய்தாய்? 9. பச்சைக்கிளி கனிந்த பழத்தைக் கொத்தித் தின்றது. 10. ஆபத்தில் கைவிடல் *(17 புள்ளிகள்)*
03.(1)School (2)Sky (3)My Umbrella (4) Kite
04. (1) பலூன் (2) சிறுவன் (3) நீளம்பாய்தல் (4) தொண்ணூறு *(4 புள்ளிகள்)*
05. (1) நவம் (2) சீயா
06. (1) எங்கள் வகுப்பு (2) பலாப்பழம் *(2 புள்ளிகள்)*
07. (1) 3 (2) 1 (3) 3 (4) 3 (5) 3 (6) 1 (7) 3 (8) 1 (9) 2 (10) 2 (11) 4 (12) 4 (13) 1 (14) 2 (15) 4
08.(1)✓ (2)× (3)✓ (4)✓ (5)✓ (6)× (7)✓ (8)× (9)× (10)✓
09.(1) கவரும் (2) தள்ளும் 10. தென்சிலுவை
11. (1) பருந்து (2)தேன்சிட்டு (3) மரங்கொத்தி (4) கிளி (5) வாத்து/கொக்கு
12. (1) முன்னால் பாதசாரிக் கடவை (2) முன்னால் சிறுவர் கடவை (3) நேரே செல்லவும் (4) வசு வண்டித் தரிப்பிடம் (5) வைத்தியசாலை
13. (1)C (2)D (3)E (4)A (5)B (6)F
14. (1) தரம்2, தரம் 5, (2) 463 (3) 77 (4) 1360 (5) 105 (6) 888 (7) 675
15. (1) 150 (2) 1/6 (3) 7m 80cm (4) மு.ப. 9.10 (5) 3l 650ml (6) 139 ரூபா (7) 2 (8) 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## VACANCIES

## POST OF REGISTRAR

Applications will be received by me up to 31st August, 2007 for the post of Registrar from suitably qualified candidates. Applications should be made in the prescribed application form and sent under registered cover to the Vice-Chancellor, University of Jaffna, SriLanka, Thirunelvely, Jaffna.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments (Non - Academic) of this University on payment of Rs.100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self - addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m., in size.

The envelope containing duly filled application form must bear "Post of Registrar" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Vice - Chancellor on or before 31st August, 2007.

Applications sent on the **specified** form only will be accepted. Applications received after the closing date will be rejected without intimation.

**Salary Scale:**
(U-Ex3(I)) : Rs.49,205-2x800:12x850:4x900-61,305/= p.m

**Qualifications:**

(a) A graduate who passesses a Ph.D or a Master's Degree with research in Administration or Management or other relevant fields with not less than twelve (12) years administrative experience.

OR

(b) A graduate with a Masters degree by examination or a Diploma in Administrative or Management with not less than fourteen (14) years of administrative experience.

OR

(c) Internal applicants who are eligible in terms of the UGC circular No.657 & 701.

Detailed statement of service record during the past 14 years giving the following particulars should be annexed to the application.

(i) Description of the posts with Grades
(ii) Names(s) of the Institution(s)
(iii) Salary scales attached to the posts
(iv) Date of appointment and date of leaving
(v) Reasons for leaving

**Note:** "Administrative Experience" means experience gained in a post in the SriLanka Administrative Service or in a comparable or a higher post after obtaining a degree from a recognized University. The term "Administrative Experience" also means that the experience gained in general administration or in overall management of an organization. The experience gained in a specialized field such as Finance, Engineering or other Technical field by itself is inadequate for this purpose.

**Sabbatical leave entitlement:**
The holder of the post Registrar will become eligible for one year paid sabbatical leave or two years no pay sabbatical leave on comletion of 07 years of service. The Registrar proceeding abroad on sabbatical leave to enrich his administrative capacity will be eligible to receive passage for himself/ herself and his / her spouse.

**Transport:**
Official transport will be provided in accordance with Goverment regulations.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment Trust Fund benefits.
5. Free medical care.

Those who are in Public Service/ Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/ Boards. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appoinment if the application routed through the Head of Department is not received.

SENIOR UNIVERSITY STAFF WITH APPROPRIATE QUALIFICATIONS AND EXPERIENCE WHO ARE PREPARED TO COME ON SABBATICAL LEAVE WILL ALSO BE CONSIDERED FOR APPOINMENT ON CONTRACT BASIS.

**Acting Vice- Chancellor,**
**University of Jaffna.**
**16.07.2007**

(C/52957)

---

## விற்பனைக்கு

[illegible] 7"x 4" [illegible] 1000 [illegible]

அம்மன் தேவஸ்தானம்,
கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

---

## விற்பனைக்கு

QD 8798 தொடரிலக்கம் கொண்ட ஆட்டோ, LG இரட்டைக் கதவு, குளிர்சாதனப்பெட்டி Sony 21" (Flat Screen) கலர் தொலைக்காட்சிப்பெட்டி, மற்றும் கட்டில் என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: தொ.பே.இல: 0777 477984.

---

## ஆண்டுகள் 7இல்...



**அமரர் வேலுப்பிள்ளை கனகரட்ணம்** *(கனெக்ஸ்)*
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

மண்ணில் 30 ✱ 01 ✱ 1942 | விண்ணில் 18 ✱ 07 ✱ 2000

*அன்போடு பிறந்து*
*அறிவோடு வாழ்ந்த*
*அன்பானவரே!*
*உம் அன்பு அக்காவையும்*
*உம் அருகில் அழைத்து*
*விண்ணில் வாழும்*
*உங்கள் ஆசிகளை வேண்டி*
*ஆத்மா சாந்தியடையப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

(62132)

"செல்வகிரி",
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

அன்புடன்:
[illegible]

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி தங்கராஜா நகுலாவதி



**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன ஓய்வு பெற்ற உத்தியோகத்தரும்**
**அங்கலின் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளரின் மனைவியும்**

அன்பு என்பதன் அர்த்தம் புரிந்து
அடுத்தவன் மனதை நோகடிக்காமல்
தியாகம் என்பதன் உச்சியைத் தொட்டு
ஆசை என்பதை அறுத்து நின்று
அடுத்தவன் உயர்வில் சிரித்து நின்று
ஈகை என்பதை இலக்காய்க் கொண்டு
பாசம் என்ற பதத்தைப் புரிந்து
பண்பு என்பதன் இலக்கணம் காத்து நின்றாய்
உன் புகழ் பரவும் இப்பூமியில் என்றும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீராம் ஆடையகம்**
இல. 17, நவீன சந்தை, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நீதித்துறையை வேவு பார்க்கும் அதிகாரத்தின் அரூபக் கரங்கள்

இலங்கையின் நீதித்துறை உயர் அதிகாரிகள் குறித்து இலங்கையின் சட்ட வரலாற்றில் முதல் தடவையாக தேசிய உளவுப்பிரிவு மும்முரமாகப் புலனாய்வு செய்யத் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

வேறு வார்த்தைகளில் இதைக் கூறுவதானால் நீதித்துறை அதிகாரிகளை - அவர்களது நடவடிக்கைகளை - வேவு பார்க்கும் வேலை உளவுப்பிரிவால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

*'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமன்றி நிலைநாட்டப்படுவதாகக் காட்டப்படவும் வேண்டும்'* (Justice not only be done but also appear to be done ) என்ற அர்த்தம் பொதிந்த வாசகம் ஒன்று உண்டு.

நீதித்துறை அதிகாரிகள், நியாயம் செய்பவர்களாக விளங்குவதற்கு அவர்கள் சுதந்திரமானவர்களாக - சுயாதீனமானவர்களாக - நடுநிலையாளர்களாக - நீதி செய்யும் விடயத்தில் அச்சமற்றவர்களாக - திகழ வேண்டும். அச்சத்துக்கும், அழுத்தத்துக்கும், நெருக்குதலுக்கும், நெருக்கடிக்கும் உள்ளாகியுள்ள ஒருவரால் நீதி செய்வதோ இயலாத விடயம்.

அரச உளவுப் படைகளால் துருவித் துருவி நோண்டப்படுபவர்களாக - நோட்டமிடப்படுபவர்களாக - நோக்கப்படுபவர்களாக - இருக்கும் நீதித்துறை அதிகாரிகள், அதனால் அரச தரப்பின் நியாயமற்ற அழுத்தத்துக்கு உள்ளாகின்றார்கள் என்றே கொள்ள வேண்டும். அத்தகைய உயரதிகாரிகள் உண்மையில் நீதி செய்தாலும், அவர்களால் நீதி நிலைநாட்டப்பட்டதாக மக்கள் நம்பமுடியாத நிலையே ஏற்படும்.

எனவே, கௌரவத்துக்குரிய நீதித்துறையினரை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை மாறாவிட்டால் நீதி நிலைநாட்டப்படுவதும் சந்தேகத்துக்குரியதாகிவிடும்.

அரசின் புலனாய்வுப்பிரிவு, வேவு அணி, உளவுப்படை போன்றவற்றை அரசியல்வாதிகளுக்கு எதிராகக் களத்தில் இறக்கி, மாற்றுத்தரப்பினரை அடிபணிய வைக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வந்த அரசுத் தலைமை, இப்போது அதே துரும்புச் சீட்டை நீதித்துறைப் பக்கமும் ஏவிவிட்டிருக்கின்றது.

ஒரு நாட்டில் ஜனநாயகத்தின் - நியாயத்தின் - தர்மத்தின் - ஆட்சி நிலவுவதற்கு மூன்று துறைகள் சிறப்பாக இயங்க வேண்டும்.

அவை:- நிறைவேற்று அதிகாரம், சட்டமாக்கல் துறை, நீதித்துறை.

இலங்கையில் பாதுகாப்பு உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரம் (ஆட்சித்துறைத் தத்துவம்) மக்களால் நேரடியாகத் தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியினால் பிரயோகிக்கப்படுகின்றது. நிறைவேற்று அதிகாரம் முழுவதும் தனி ஒரு மனிதரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மக்களின் சட்டமாக்கல் அதிகாரம் (தத்துவம்) மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சில சமயங்களில் - சர்வஜன வாக்கெடுப்பு மூலம் - மக்களே நேரடியாக அதைப் பிரயோகிக்கவும் முடியும்.

அடுத்தது நீதித்துறை. நாடாளுமன்ற விவகாரங்கள் தவிர்ந்த ஏனைய அம்சங்களில் நீதித்துறை அதிகாரமானது சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள் போன்றவற்றால் பிரயோகிக்கப்படுகின்றது.

இந்த மூன்று துறைகளுமே ஒன்றை மற்றொன்று நெருக்குதலுக்கு உள்ளாக்காமலும், ஒன்றின் செயற்பாட்டை மற்றையது முறையற்ற விதத்தில் பாதித்துக் குறுக்கீடு செய்யாமலும், சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் அவையவைக்குத் தரப்பட்டுள்ள வரையறைக்குள் நின்றும் செயற்படும்போதுதான் நாட்டில் ஆட்சிமுறை நியாயமானதாக அமையும். நல்லாட்சி நடைபெறுவதாக அர்த்தப்படும்.

இலங்கையைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரத்திடம் ஆட்சித்துறைத் தத்துவம் இருப்பதால், அந்த ஆட்சித்துறை வழங்கும் பதவிகளுக்கு அடிபணிந்து - கையேந்தி - நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் அந்த நிறைவேற்று அதிகாரத்துக்கு அடிமையாகிவிட்டார்கள். அதாவது சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் இயங்கவேண்டிய நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரத்தின் கைப்பொம்மையாகிவிட்டது. இப்போது நீதித்துறையையும் நிறைவேற்று அதிகாரத்தின் ஏவலுக்குள் கொண்டுவரும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. நீதித்துறை அதிகாரிகளை வேவுபார்க்கும் நிறைவேற்று அதிகாரத்தின் செயற்பாடு அத்தகைய அர்த்தத்தையே நமக்குத் தருகின்றது.

இவ்விவகாரத்தில், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை தென்னிலங்கை பௌத்த - சிங்கள மேலாண்மைப் பிடியில் சிக்கி, அதையே தனது அதிகார நெறி வரம்பாக வரித்துக் கொண்டுள்ள இந்த ஆட்சி முறைமையின் கீழ் நல்லாட்சி என்பதே சாத்தியமற்றது. அதுவே அவர்களின் பட்டறிவு நிலைப்பாடு.

ஆரம்பத்தில் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களையும், நியாயம் வேண்டிக் கிளர்ந்துள்ள அவர்களின் எழுச்சியையும் அடக்குவதற்கு சிங்கள அரசியல் தலைமைகளினால் வேவுப்படைச் செயற்பாடுகள் முழு அளவில் முடுக்கிவிடப்பட்டன.

பின்னர் அவை மெல்ல மெல்ல தென்னிலங்கையில் எதிரணி அரசியல்வாதிகளை அடக்கி ஒடுக்கி அடிபணிய வைக்கவும், அவர்களைப் பழிவாங்கவும் வசதியான ஒரு வழிமுறையாகக் கையாளப்பட்டது. இப்போது அது நீதித்துறையின்பாலும் திருப்பப்பட்டிருக்கின்றது. அதுதான் நாம் இப்போது உணர்ந்து கொள்ளும் செய்தி.

# இந்திய - இலங்கை கடற்படைகளின் தகவல் பரிமாற்ற உடன்பாட்டை ரத்துச் செய்க!

## பிரதமர் மன்மோகன்சிங்கிடம் வைகோ வலியுறுத்து

சென்னை,ஜூலை 18

இந்திய கடற்படையும் இலங்கைக் கடற்படையும் தகவல் பரிமாற்றத்துக்காக செய்து கொண்டதாகக் கூறப்படும் ஒப்பந்தத்தை உடன் ரத்துச் செய்ய வேண்டும்.

பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

பிரதமருக்கு அவர் நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இப்படிக் கோரியுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்திய கடற்படையும் இலங்கை கடற்படையும் தகவல் பரிமாற்றத்துக்காக தொலைத்தொடர்பு சாதனங்களின் ஒருங்கிணைப்பு செயற்பாட்டினை மேற்கொள்ள முடிவு செய்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இச் செய்தி மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது.

2004 இல் இந்தியாவுடன் இலங்கை அரசு இராணுவ ஒப்பந்தம் செய்ய முயன்றபோது அதை நான் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவந்து அதன் ஆபத்தை சுட்டிக்காட்டியபோது நீங்களும் இலங்கையுடன் இராணுவ ஒப்பந்தம் செய்ய மாட்டோம் என்று உறுதி அளித்தீர்கள்.

இலங்கை விமானப் படைக்கு உதவும் வகையில் ராடர் சாதனங்களை இந்தியா வழங்கியது. இதை நான் உங்களிடம் சுட்டிக்காட்டியபோது தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப் படுமானால் ராடர்களை இந்தியா திரும்பப் பெறும் என்று உறுதி கூறினீர்கள்.

ஆனால், ராடர்களைத் திரும்பப் பெறுவதற்குப் பதிலாக, இப்போது நடைபெறும் போரில் மேலும் ராடர் சாதனங்களை இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளது.

**குடாநாட்டு மக்களுக்கான உதவிகளை அனுப்ப மறுத்தமை**

யாழ்ப்பாணத்தில் துயரத்தில் பரிதவிக்கும் தமிழ் மக்களுக்கு கொடுப்பதற்காக தமிழக மக்களிடம் திரட்டிய உணவையும் மருந்துப் பொருள்களையும் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக அனுப்பி வைப்பதற்கான அனுமதியை இந்திய அரசு வேண்டுமென்றே மறுத்துவிட்டது. இதற்காக நான் நேரில் உங்களைச் சந்தித்து கோரிக்கை வைத்தும் பயனில்லை.

பழைய தவறைச் செய்யவேண்டாம். சிங்கள அரசு இலங்கையில் உள்ள தமிழர்களை கூண்டோடு அழிக்க முற்பட்டு இனப் படுகொலையையும் இராணுவத் தாக்குதலையும் தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியா இராணுவ ரீதியான உதவிகளைச் செய்து வருகிறது.

இந்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழக மக்களை ஆழமாகக் காயப்படுத்துகிறது. தமிழர்களுக்கு எதிராக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு செய்யும் துரோகம் இது.

எனவே, இரு நாட்டு கடற்படைகளுக்கும் இடையில் செயற்படும் தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கையை இந்திய அரசு ரத்துச் செய்ய வேண்டும். 1987 இல் இந்தியா செய்த தவறு களை மீண்டும் செய்ய வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன் - என்றுள்ளது. (அ-1)

# நடமாடும் காசநோய் சிகிச்சை நிலையம் குருநகரில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18

பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் நடமாடும் சிகிச்சை நிலையம் இன்று பிற்பகல் 2 மணிமுதல் 4 மணி வரை குருநகர் வைத்திய சாலையில் இயங்கவுள்ளது.

மூன்று வாரங்களுக்கு மேல் இருமல் உள்ளவர்கள் மற்றும் காசநோய் என சந்தேகிப்பவர்கள் இங்கு வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

நடமாடும் சிகிச்சை நிலையம் மாதந்தோறும் 3ஆவது புதன்கிழமை இதே இடத்தில் இயங்கும் எனவும் இதே போல் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரை சாவகச்சேரி வைத்திய சாலையிலும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரை மந்திகை ஆதார வைத்திய சாலையிலும் இச் சிகிச்சை நிலையம் இயங்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (203)

**எக்காரணம் கொண்டும்**

# ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்பட மாட்டாது

கொழும்பு, ஜூலை 18

அடுத்த மாதம் ஆறாம் திகதி தொடக்கம் நடத்தப்படவுள்ள ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்படமாட்டாது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க இப்படிக் கூறியுள்ளார்.

பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளை ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் பரீட்சை ஆணையாளர் தமது அலுவலகத்தில் விசேட கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

வடக்கு - கிழக்கு உட்பட சகல மாவட்டங்களின் பரீட்சை இணைப்பாளர்களும் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

ஆசிரியர் தொழிற் சங்கங்கள் தமது கோரிக்கைக்காக போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளன. இந்தப் போராட்டத்துக்காக பரீட்சையை ஒத்திவைக்கப்போவதில்லை. திட்டமிட்டபடி பரீட்சைகள் இடம்பெறும் என்று - பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகும் இந்தப் பரீட்சையை பகிஷ்கரிக்க எடுக்கும் முடிவு கல்வியாளர்களுக்கு ஏற்புடையதல்ல என்றும் அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கில் பரீட்சைகளை நடத்துவது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தமக்கு உத்தரவாதத்தை வழங்கியுள்ளன என்றும் அவர் அங்கு கூறினார். (அ-1)

# வைத்திய சாலைகளுக்கான மருந்துவகைகள் 'றுகுணு' கப்பலில் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றுக்கான இரண்டாவது காலாண்டுக்குரிய மருந்து வகைகள் 'றுகுணு' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 10 மெற்றிக்தொன் மருந்து வகைகளும், மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கு 10 மெற்றிக்தொன் மருந்து வகைகளும் எடுத்துவரப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்திய சாலைகளுக்குத் தேவையான பல முக்கிய மருந்து வகைகள் இந்தத் தொகுதியில் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும், இவை மிக விரைவில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-50)

# நான்கு நாள்களாகக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 18

புத்தூர் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேம்பம்புலம், புத்தூரைச் சேர்ந்த பொ.கருணாநிதி (வயது 55) என்பவரையே காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி காலை 8 மணியளவில் அச்சுவேலிக்குச் செல்வதாகக் கூறிச்சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் வெளியே புறப்படும் போது தனது அடையாள அட்டையை எடுத் துச் செல்லவில்லை எனவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-50)

# மந்துவிலில் கண்காட்சி

போசாக்கு மாதத்தை முன்னிட்டு மந்துவில் குடும்பநல உத்தியோகத்தர் பிரிவில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் ஆரம்ப சுகநல மழலைகள் விருத்திக் கண்காட்சியும் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு மந்துவில் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளன. (202)

# பலாலி ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவானோர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு 2007/2008 கல்வியாண்டுக்குத் தெரிவானவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

தெரிவானவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி பயிற்சி நெறிக்கு சமுகமளிக்கும்படி கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.

தெரிவானவர்கள் விவரம் வருமாறு:-

**ஆங்கில நெறி**

ரி.சயந்தன் - அச்சுவேலி சரஸ்வதி வித்தி., எம்.தனிசன் - வட்டுக்கோட்டை இ.க., எஸ்.மகேஸ்வரன் - உடுப்பிட்டி அ.மி.க., கே.மனோகரன் - தொண்டைமானாறு ம.வி., பீ.ஜெயக்குமார் - அளவெட்டி ஆர்.சீ.ரீ.எம்.எஸ்., பீ.கே.சேவியர் - புனித மரியாள் வித்தியாலயம் (ஓ.எல்.ஆர்), எம்.சுஜானியா - வவு/பூந்தோட்டம் ம.வி., கே.மனோ - சுதுமலை வடக்கு தமிழ் ம.வி., செல்வி ரீ.கமல நாதன் - சந்திரமௌலிச வித்தி., செல்வி எஸ்.வாசுகி - கைதடி நுணாவில் அ.த.க.பா.,

திருமதி பீ.ஸ்ரீஸ்குமார் - பொலிகண்டி இ.த.க.பா, செல்வி வீ.சுமதி - அல்லாரை அரசாங்க தமிழ் பாடசாலை, எஸ்.முகுந்தன் - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, டீ.ஜாசன் - சுண்டுக்குளி ம.க., வண.எம்.மேரி மெட்டி லின் திரேசா - சென்.மேரிஸ் றோ.க. வித்தி., செல்வி சீ.எஸ்.மனோரஞ்சன் - சென். ஜோன்ஸ் கல்லூரி, திருமதி எஸ். தேவகரன் - சுண்டுக்குளி ம.க., செல்வி எல். யசோதா - கச்சாய் அ.த.க.பா., திருமதி எம்.அமிர்தலிங்கம் - ஞானாசாரியார் கல்லூரி, வண.மேரி நித்தியாஞ்சலி - கார்மல் பாத்திமா கல்லூரி, திருமதி பீ.ஜீவரஞ்சினி - கிளி/தர்மபுரம் ம.வி., செல்வி என்.மன்சுதா - கிளி/மத்திய கல்லூரி.

**றோமன் கத்தோலிக்கம்**

திருமதி எம்.யோகரட்ணம் - கிளி/கனகபுரம் ம.வி., திருமதி வை.மேரி கொலஸ்ரா - கிளி/ கனகபுரம் ம.வி., செல்வி பீ.தியாளி - மட்/வந்தாறுமுல்லை ம.ம.வி.

**நீரியல் உயிர்வளமும் • தொழினுட்பமும்**

எம்.ஏச்.ஜசார் - திரு/அல் அக்சா யூனியர் பாடசாலை. (1)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 3 | வியாழக்கிழமை |
| | 19.07.2007 |
| திதி : பஞ்சமி | முன்னிரவு 07.45 |
| நட்சத்திரம் : பூரம் | [illegible] |
| [illegible] | : 07.31 - 09.01 |
| ராகுகாலம் | : 01.31 - 03.01 |

# பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும்

சுழிபுரம், ஜூலை 18

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தம்பதியரும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் து.எங்கரசும் கலந்துகொள்வர்.

நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி நிகழ்த்துவார். (202-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் அலுவலகத்துக்கு ஊழியர்களை அழைத்துச் செல்லும் பஸ் சேவை இடம்பெறாததால், அங்கு பணிபுரியும் சுமார் 200 ஊழியர்கள் பணிக்குச் செல்லவில்லை. நிர்வாகப் பணி யில் ஈடுபடும் உயர் அதிகாரிகள் மட்டும் தமது வாகனங்களில் அலுவலகம் சென்றனர். அவர்களும் நண்பகலுடன் பணியில் இருந்து திரும்பி விட்டனர்.

கிழக்கு, வடக்கு மாகாண சபை அலுவல கங்களில் பணிபுரிபவர்கள் கடமைக்குச் செல்லாததால் அந்த அலுவலகங்கள் வெறிச் சோடிக் காணப்பட்டன. அங்கு பதற்றமான சூழலும் காணப்பட்டது. (அ-1-151)

## பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தவருக்கு முன்பக்கமாக நின்று ஆயுததாரி வேட்டுக்களைத் தீர்த்துள்ளார் என்றும் நெஞ்சு, தலை ஆகிய பகுதிகளில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு உத்தரவிட்ட நீதிவான், சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி உத்தர விட்டார். (அ-1-151)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தம் வெளிப்படுத்தப்படாமல் இருப்பது தொடர்பாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் தனது விசனத்தை வெளியிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை ஏற்கனவே நாடாளு மன்றத்தில் அரசு சமர்ப்பித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தத்தின் வாசகங்களை சபையில் ஏற்கனவே சமர்ப்பித்த அரசு, அந்த ஒப்பந்தத்தின் பின் இணைப்பான 42 விடயங்களை அம்பலப் படுத்தவில்லை. அவற்றை யும் சேர்த்து வெளியிடும்படியே ஜே.வி.பி. தொடர்ந்து அரசுத் தலைமையை வலியுறுத்தி வருகின்றது. (சி)

## இறைதியான நிகழ்வு ஒத்திவைப்பு

ஈச்சமோட்டை, பழைய பூங்கா வீதியில் உள்ள இறைதியான மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என்பதை அறியத் தருகின்றோம்.

**யாழ். மறை மாவட்ட இறைதியானக் குழுவினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரன் ஜெகதீஸ்வரி (ஜெயந்தா)

கைதடி வடக்கைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரன் ஜெகதீஸ்வரி நேற்று (17.07.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரனின் (அரச மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு, கோப்பாய்) அன்பு மனைவியும் சாரதா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), துஜீபன் (கைதடி முத்துக்குமாரசாமி வித்தி.) ஆகியோரின் அன்புத் தாயும் செல்வராசா-சிவமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாதன் - இரத்தினம் தம்பதியரின் மருமகளும் கேதீஸ்வரி (கனடா), சுபதீஸ்வரி (கனடா), கிருபாகரன் (ஜேர்மனி), வரதீஸ்வரி (சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் சகோதரியும் சிவபாலசிங்கம் (டென்மார்க்), காலஞ்சென்ற தவபாலசிங்கம் ஆகியோரின் மருமகளும் கந்தரின் பேர்த்தியும் மகேஸ்வரி, புவனேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி வடக்கு,**
**கைதடி.**

தகவல்:
**மகேஸ்வரன்** *(கணவர்).*

### அருளம்பலம் சுப்பிரமணியம் (தம்பிமுத்து ஆசிரியர்)

**(முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர்,**
**மாரியம்மன் வீதி, பெருங்காடு, புங்குடுதீவு -03)**



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு குணானந்த மாவத்தையில் தற்போது வசித்து வந்தவருமான அருளம்பலம் சுப்பிரமணியம் 15.07.2007 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பெரியதம்பி- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் பாலரெத்தினம் (கனடா), இராஜேஸ்வரி (கொழும்பு), புவனேஸ்வரி (கொழும்பு), குணரெத்தினம் (கனடா), சந்திரேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அருமைத் தந்தையும் பங்கயச்செல்வி (கனடா), கிருஷ்ணபிள்ளை (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன், புஸ்பராணி (கனடா), விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), ரதிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற கனகரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), நல்லம்மா, காலஞ்சென்றவர்களான கனகம்மா, தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற விநாயமூர்த்தி, முத்தம்மா, நாகேஷ், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, குணேஸ்வரி, பராசக்தி, பொன்னையா, கணபதிப்பிள்ளை, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்லம்மா, காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கதிர்காமு, அன்னலெட்சுமி, புவனேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் மஞ்சு-சதீஸ், மீரா- ரமேஸ்குமார், மாலி, முகி, சரவணா, குமார்- சுகந்தா, காந்தன்-ரஜீதா, காந்தினி- சிவா, கரன் - மகேஸ், சயந்தினி - ஆரூரன், பிரபாகரன் - சிவசக்தி, கமலினி, வாகீசன், கஜந்தினி - நிரந்தன், கௌசிகன், கௌந்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் துவாரகா, லக்ஷா, அஸ்விதா, மானுஷா, அஸ்விதா, திலீபன், சாரங்கி, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (18.07.2007) புதன்கிழமை பி.ப 3 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
*கி.இராஜேஸ்வரி*
*(தேவி-மகள்),*
*குணானந்த மாவத்தை,*
*கொழும்பு-13*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கையால் கந்தளாய் கரும் புச் சேனை இல்லாமல் போய்விடும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

கந்தளாய் குளக்கோட்டன் என்ற தமிழ் மன்னன் உருவாக்கிய பூமி. அந்த வரலாற்றைத் திரிவு படுத்தி அதை சிங்கள மன் னன் உருவாக்கினார் என்று சிங்களவர்கள் கூறுகின்றனர்.

எமது கந்தளாய்ப் பகுதியை நீங்கள் ஆக்கிரமித்தீர்கள். இப்போது அதை வெளி நாடு ஒன்று ஆக்கிரமிக்கப் போகின்றது என்று அஞ்சுகிறீர்கள்.

வடக்கு - கிழக்கில் எமது பூமியை நீங் கள் இப்போது ஆக்கிரமித்து வருகிறீர்கள். அது எமக்கு எந்தளவு வேதனையைத் தரும் என்பதை நீங்கள் இதிலிருந்தாவது எண் ணிப் பார்க்க வேண்டும்.

**ஆக்கிரமிப்புகளை நிறுத்துங்கள்**

எமது 'குடுமிமலை' பிரதேசத்தை ஆக்கிரமித்து 'தொப்பிகல' என்று அதற்குப் பெயர் மாற்றி, அங்கு சிங்களவர்களைக் குடியேற்றுகிறீர்கள்.

குடுமிமலை கைப்பற்றப்பட்டதை இம்மாதம் 19ஆம் திகதி ஒரு விழாவாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறீர்கள். என்னையும் அதில் கலந்துகொள்ளுமாறு எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய ஆக்கிரமிப்புகளுக்கு எல் லாம் அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லையேல் விளைவு பாதகமானதாக அமையும்.

இந்த ஜூலை மாதத்தில் இந்நாட்டிற்கு ஏதும் ஆபத்துவந்துவிடுமோ என்று நாம் அஞ்சுகிறோம்.

தமிழர் பிரச்சனைக்கு உரிய தீர்வு முன்வைக்கப் படாவிட்டால் நிச்சயம் தமிழீழம் தான் ஒரே வழி.

தமிழீழம் மிக விரைவில் மலரும். அதன் அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வதற்காக தலைவர் பிரபாகரனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்படுவார்- என்றார். (உ-07)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

அவர் நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கை வெற்றி கொண்ட அதே சூட்டோடு வடக்கையும் வெற்றிகொள்ள வேண்டும். வடக்கு நோக்கிப் படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். உடனடியாக வடக்கைக் கைப்பற்றி ஜன நாயகத்தை நிலைநிறுத்த வேண்டும்.

ஆனால், வடக்கு மீது யுத்தம் தொடுப்பதற்குப் பதிலாக புலிகளை ஜெனிவாவிற்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று நாம் அறிகின்றோம். அவ்வாறான நடவடிக் கைகளுக்கு நாம் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டோம்.

1987 இல் சட்டவிரோதமாகச் செய்யப் பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜே.வி. பியின் முயற்சியால் இரத்துச் செய்யப் பட்டு அந்த ஒப்பந்தம் மூலம் இணைக்கப்பட்டிருந்த வடக்கும் - கிழக்கும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து இப்போது கிழக்கு மாகாணம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

புலிகளின் பயங்கரவாதத்தை கிழக்கில் முற்றாகத் தோற்கடித்து அங்குள்ள மக்களை நிம்மதியாக வாழவைப்பதற்காகப் படையினர் மேற்கொண்ட யுத்த நடவடிக்கை மூலம் கிழக்கு இப்போது புலிகளின் பிடியில் இருந்து விடுபட்டுள்ளது.

தற்போது கிழக்கில் புலிகளின் முகாம்கள் எதுவுமில்லை. யுத்தம் மூலம் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்று பல அரச சார்பற்ற நிறுவனத்தினரும் இன்னும் பலரும் கூறி வந்தனர். அது இப்போது பொய்யாகி விட்டது.

கிழக்கில் இருந்து புலிகளை முற்றாக விரட்டியடித்ததன் மூலம் யுத்தம் மூலம் புலிகளைத் தோற்கடிக்கும் ஆற்றல் தமக்கு உண்டு என்பதைப் படையினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

கிழக்கு இல்லாத புலிகளால் வடக்கை மாத்திரம் வைத்துக்கொண்டு தமிழீழம் பெறுவதற்காகப் போராட முடியாது. அது எந்த வகை யிலும் சாத்தியப்படாது.

கிழக்கில்தான் அனைத்து வளங்க ளும் உள்ளன. அந்த வளங்களைப் புலிகள் பயன் படுத்தினர். இப்போது அவ்வாறு செய்யமுடியாதுள்ளதால் புலிகள் முற்றாகப் பலமிழந்துள்ளனர்.

புலிகளைத் தோற் கடிக்கும் பெரிய முயற்சியில் இறங்கி வெற்றி வாகை சூடிய படையினரை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம்.

அரசு கிழக்கு வெற்றியை தனது அரசியல் இலாபத்திற்காகவோ அல்லது வேறு நோக்கிற்காகவோ பயன்படுத்தக்கூடாது. அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

தற்போது கிழக்கில் உள்ள மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழும் வகையில் அங்கு ஜனநாயகம் நிலை நாட்டப்பட வேண்டும். அதற்கான வேலைத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் கிழக்கு வெற்றி முழுமையடையும். (அ-சி)

**கணக்கீடு**
**மாதிரி வினாத்தாள்**
**(விடைகளுடன்)**
கொழும்பு, கண்டி, வவுனியா முன்னணி பாடசாலைகளினதும், முன்னணி ஆசிரியர்களினதும் கணக்கீட்டு மாதிரி வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.
**S.தவா**
New Science Hall, Jaffna.

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் தெரிவிக்கின்றன.

சித்தாறு வனப்ட நதியில் தப்பிச் செல்ல முயன்ற புலி களின் குழுவொன்றின் மீதே படை யினர் தாக்குதலைத் தொடுத்தனர் எனத் தெரிவிக்கும் படைத்தரப்பு, விடு தலைப் புலிகள் தரப்பிலும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் குறிப்பிட்டது.

கிழக்கு மாகாணம் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் பட்டதன் பின்னர் வனப்பகுதிகளில் குழுக் களாக இயங்கும் புலிகளுக்கும், படையினருக்கும் இடை யில் இடம்பெற்ற ஏழாவது தாக்குதல் சம்பவம் இது என்றும் படைத்தரப்பு சுட்டிக்காட்டியது.

இது தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல் கள் எதுவும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக் கது. (சி)

## மூதூர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்தது. அப்போது பிரதம நீதியரசர் கூறிய தாவது:-

மனுதாரர் தேவையில்லாத பிரச்சினை களை உருவாக்கி, சர்வதேச ரீதியில் செய்தி பரப்பும் வேலையைத்தான் செய்கிறார்.

இந்தப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் விண்ணப்பம் செய்திருந்தால் அது வேறு - இது வேறு.

இவர்கள் இப்படித் தமக்குத் தேவை யில்லாத பிரச்சினையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு பிரசாரம் தேட முயல்வார்கள். அப்படித் தூக்கிப் பிடிக்க விடயம் இல்லாவிட்டால் கடைசியில் நீதித்துறையையாவது சாடுவார்கள். இத்தகைய போக்குக்கு அனுமதிக்க முடியாது. தேவையில்லாமல் பிரச்சினை களை உருவாக்க இடமளிக்க முடியாது.

சம்பூர் மீட்கப்பட்டது, மூதூர் கைப்பற்றப்பட்டது என்றெல்லாம் அரசும் சரி, அல்லது வேறு யாரும் சரி கூறினால் அதில் அர்த்தமில்லை. புதிதாக எதுவும் கைப்பற்றப்படவில்லை. ஏற்கனவே மூதூரில் நீதிமன்றங்கள் கூடச் செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. எனவே இத்தகைய அறிவிப்புகளும் அர்த்தமற்றவை. - இந்தச் சாரப்பட பிரதம நீதியரசர் கருத்துத் தெரிவித்தார். (சி)

## மரண அறிவித்தல்கள்

### விசாகமுத்து வடிவேலு

**(முன்னாள் காணி அலுவலக ஓவசியர்)**



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், மாவடி வீதி, சுதுமலை தெற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட விசாகமுத்து வடிவேலு நேற்று (17.07.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் (பாக்கியம் ரீச்சர்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற விசாகமுத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், இராசலிங்கம், நடராசா மற்றும் நேசமலர் ஆகியோரின் சகோதரனும் வேல்தாசன் (லண்டன்), சூரியதாசன் (லண்டன்), நளினி, கௌரி, தர்மினி (ஹற்றன்), பாக்கியதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஜனி, விற், பரஞ்சோதிநாதன், திருச்செல்வம், கலைச்செல்வன், மாதினி ஆகியோரின் மாமனும் தயசீலனின் (**RDA**) உற்ற தகப்பனும் விதுசா, சூரிகா, மீயோர், யூனிக்ஷா, அனோஜா, கிரிதாசன், சதுர்கஸ்தன், ஜீவனா, தனகஸ்தன், மதனாகரன், பிந்துரன், வைஷ்ணவி, வர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2007) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாவடி லேன்,**
**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

தகவல்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

### வல்லிபுரம் இராமேஸ்வரன்

வல்லிபுரக் குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராமேஸ்வரன் நேற்று (17.07.2007) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் வேலுப்பிள்ளை மற்றும் வல்லிபுரம் சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் மதுமதியின் அன்புக் கணவரும் சாரங்கன், பிரியங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தபாலன் தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தி, ஜெயந்தி, ரவீந்திரன், றங்கன் (பவா), கோகுலன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராசா, ஜோகன் (சவூதி), கலைவாணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவலைகள்

திருமதி

**இராஜமணி துரைசிங்கம்**

(திதி: பூர்வபட்ச ஷஷ்டி)



தாயின் மடியில்:
01✱04✱1934

இறைவன் அடியில்:
30✱07✱2006

**எம் அன்பின் உறைவிடம்**
**எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி**
**ஓராண்டு கடந்து விட்டாலும் உங்கள்**
**நினைவு எம் நெஞ்சை விட்டு**
**என்றென்றும் நீங்காது.**
**உங்கள் ஆத்ம சாந்திக்காக**
**எல்லாம் வல்ல இறைவனைப்**
**பிரார்த்திக்கின்றோம்.**

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்,
N.துரைசிங்கம் (கனடா) - கணவர்,
**தொ.பே: 0019052099269**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

தகவல்: பொன்.தர்மேந்திரன்,
10, செல்லர் லேன்,
செம்மணி வீதி, நல்லூர்.

(62150)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org